### மியாட் மருத்துவமனையில்

# ரத்தம் சம்பந்தப்பட்ட நோய் சிகிச்சைக்கு புதிய மையம்

## இங்கிலாந்து அமைச்சர் திறப்பு



மியாட் மருத்துவமனையில் ரத்தம் தொடர்பான நோய்களுக்கு அதிநவீன சிகிச்சை அளிப்பதற்கான ஒப்பந்தத்தில் இங்கிலாந்து அமைச்சர் கென்னத் கிளார்க், மருத்துவமனை நிர்வாக இயக்குனர் பிரிதிவ் மோகன்தாஸ் கையெழுத்திட்டனர். அருகில் டாக்டர் மோகன்தாஸ் உள்ளிட்டோர்.

சென்னை, மே 10: மியாட் மருத்துவமனை யில் ரத்த புற்றுநோய், ரத்தசோகை, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை உள்ளிட்ட ரத்தம் தொடர்பான சிகிச்சைகளுக்கு புதிய மையத்தை இங்கிலாந்து அமைச்சர் திறந்து வைத்தார்.

மணப்பாக்கத்தில் உள்ள மியாட் மருத்துவமனையில் ஹோமியோ ஆங்காலஜி (புற்றுநோய்) மற்றும் எலும்பு மஜ்ஜை மாற்று சிகிச்சை பிரிவு மையம் ₹25 கோடி செலவில் உருவாக்கப்பட்டுள்ளது.

நாட்டிலேயே முதல் முறையாக இந்த மையம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று நடந்தது. அதிநவீன மருத்துவ சிகிச்சை பெற, இங்கிலாந்தில் உள்ள ஒயிட்டிங்டன் மருத்துவமனையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளனர். இதில் மியாட் மருத்துவமனை இணை நிர்வாக இயக்குனர் பிரிதிவ் மோகன்தாஸ், இங்கிலாந்து கேபினெட் அமைச்சர் கென்னத் கிளார்க் ஆகியோர் கையெழுத்திட்டனர்.

இந்த புதிய மையத்தை இங்கிலாந்து அமைச்சர் திறந்துவைத்து பேசுகையில், "ஒப்பந்தம் மூலம் மருத்துவ தொழில்நுட்பம், தகவல்களை பரிமாறி கொள்ள முடியும். சர்வதேச தரத்தில் மருத்துவம் வழங்குவதில் மியாட் மருத்துவமனை சிறந்து விளங்குகிறது" என்றார்.

இணை நிர்வாக இயக்குநர் டாக்டர் பிரிதிவ் மோகன்தாஸ் பேசுகையில், "எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை பெற வெளிஇடங்களில் ₹40 லட்சம் செலவாகும். ஆனால், இங்கு ₹10 லட்சம் முதல் ₹15 லட்சம் வரையில் சிகிச்சை பெற முடியும்.

சிவப்பு ரத்த அணுக்கள் குறைவாக பிறக்கும் குழந்தைகளுக்கு இங்கு சிகிச்சை அளிக்கப்படும். அதிநவீன மருத்துவ தொழில்நுட்பமும், சிறந்த மருத்துவ வல்லுநர்களும் இங்கு உள்ளனர். மியாட் மருத்துவ குழுவில் ரத்தவியல் நிபுணர்கள், ரத்த நோயியல் நிபுணர்கள், ரத்த புற்றுநோயியல் நிபுணர்கள், கதிர்வீச்சு புற்றுநோய் வல்லுநர்கள் மூலம் அனைத்து வயதினருக்கும் ரத்த தொடர்பான நோய்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் என்றார். நிர்வாக இயக்குநர் மோகன்தாஸ் கூறுகையில்,"ரத்தம் தொடர்பாக 72க்கும் மேற்பட்ட நோய்கள் உள்ளன. இதில் ரத்த புற்றுநோய், லுகேமியா, நிணநீர் சுரப்பி புற்றுநோய், ரத்தசோகை நோய், தலசிமியா உள்ளிட்டவை அடங்கும். ரத்தம் தொடர்பான அனைத்து பிரச்னைகளுக்கும் சிகிச்சை அளிக்கும் வகையில் ₹25 கோடியில் இந்த புதிய மையம் தொடங்கப்பட்டுள்ளது." என்றார்.

தென் இந்தியாவுக்கான பிரிட்டிஷ் உயர்மட்ட துணை ஆணையர் நிதாவி ரிநகிஸ், ஒயிட்டிங்டன் மருத்துவமனை இயக்குனர் நிக் ஹர்பர், மியாட் மருத்துவமனை டாக்டர்கள் செழியன் சுபாஷ், ஜாய்தீப் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.